22-10-2023 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 16.02.1996

## வைரவிழா ஆண்டில் விசேஷ கவனம் கொடுத்து சமயம் மற்றும் சங்கல்பம் என்ற பொக்கிஷங்களை சேமிப்பு செய்திடுங்கள்

இன்று மும்மூர்த்தி படைப்பாளர் சிவ தந்தை குழந்தைகளுக்கு மூன்று வாழ்த்துக்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். குழந்தைகள் தந்தைக்கு வாழ்த்துக்கள் கொடுப்பதற்காக வந்திருக்கின்றார்கள், ஆகவே, தந்தை அதற்கு பதிலாக மூன்று வாழ்த்துக்களைக் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார். ஒன்று சிவஜெயந்திக்கானது, இரண்டாவது வைரவிழாவிற்கானது மற்றும் மூன்றாவது நிகழ்கால சமயம் ஊக்க உற்சாகத்துடன் சேவை செய்வதற்கான வாழ்த்து. எனவே, பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள குழந்தைகளுக்கு மூன்று வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். தந்தையிடம் அனைவருடைய உள்ளங்களின் ஊக்கம் உற்சாகம் நிறைந்த சேவைச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த அலௌகீக ஜெயந்தியானது (பிறந்த நாள்) முழு கல்பத்திலும் நடைபெறுவது இல்லை. ஏனென்றால், முழு கல்பத்தில், அவர்கள் தேவ ஆத்மா வாக இருக்கலாம், மகான் ஆத்மாவாக இருக்கலாம், சாதாரண ஆத்மாவாக இருக்கலாம், ஆனால், ஆத்மாக்கள் ஆத்மாவினுடைய பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்கள். மேலும், இந்த சங்கமயுகத் தில் சிரேஷ்ட ஆத்மாக்களாகிய நீங்கள் யாருடைய ஜெயந்தியைக் கொண்டாடுவதற்கு வந்திருக் கின்றீர்கள்? பரம ஆத்மாவினுடைய ஜெயந்தியை மற்றும் தந்தை பரம ஆத்மா குழந்தைகளுடைய ஜெயந்தியைக் கொண்டாடுகின்றார். சத்யுகம் - திரேதாயுகத்தில் கூட பரம ஆத்மா உங்களுடைய பிறந்த நாளைக் கொண்டாடமாட்டார் மற்றும் நீங்கள் பரமாத்மாவினுடைய பிறந்த நாளைக் கொண்டாடமாட்டீர்கள். எனவே, எவ்வளவு கோடி, கோடி, கோடி மடங்கு பாக்கியசாலி ஆத்மாக்கள் நீங்கள்! இப்படி எப்பொழுதாவது தன்னுடைய சிரேஷ்டமான பாக்கியத்தினை கனவிலும் கூட நினைத்துப் பார்த்திருப்பீர்களா? நினைக்கவில்லை தானே? ஆனால், இன்று சாகாரத்தில் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றீர்கள். எனவே, குஷி இருக்கிறது அல்லவா! பாருங்கள், உள் நாட்டினரோ, வெளிநாட்டினரோ, மதுபனில் இருப்பவர்களோ, யாரெல்லாம் இந்தக் குழுவில் அமர்ந்திருக்கின்றீர்களோ, நீங்கள் அனைவரும் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்! உள்ளத்தில் என்ன பாடல் பாடுகின்றீர்கள்? ஆஹா! என்னுடைய பாக்கியம்! மேலும், தந்தையும் ஆஹா! குழந்தை களுடைய பாக்கியம்! என்ற பாடல் பாடுகின்றார். விசேஷ சேவைக்கான குழு அமர்ந்திருக் கின்றீர்கள் அல்லவா, அனைத்து விதத்திலும் விசேஷமானவர்கள் அல்லவா! எனவே, விசேஷ சேவைக்கான விசேஷ பிரத்யட்சபலனை அடையக்கூடிய ஆத்மாக்கள் நீங்கள். எனவே, தந்தையும் அப்பேற்பட்ட சிரேஷ்ட குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்றார். குழந்தைகள் அதிகமாக மகிழ்ச்சி அடைகின்றீர்களா அல்லது தந்தை அடைகின்றாரா? இருவருமே அடைகின்றோம். அல்லது, தந்தை அதிகமாக அடைகின்றாரா? நீங்கள் அதிகமாக அடைகின்றீர்கள். நல்லது.

இன்று பாப்தாதா நாலாபுறங்களிலும் உள்ள சேவாதாரி வைரங்களினுடைய

மாலையைப் பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் மாலையில் இருக்கின்றீர்கள் அல்லவா? நீங்கள் தந்தையின் கழுத்தில் வைரமாகி ஜொலிக்கக்கூடிய மாலையின் மணிகளா அல்லது நீங்கள் வேறு யாருமா? நீங்கள் தானே, வேறு எவரும் இல்லை தானே? உலகத்தினர் 108 மணி மாலை என்று சொல்கின்றார்கள், ஆனால், பாப்தாதாவினுடைய கழுத்தில் வைரங்களாகிய உங்களைக் கொண்ட மாலை எவ்வளவு நீளமானதாக இருக்கிறது? கீழே அமர்ந்திருக்கும் நீங்கள் 108ட்டாக ஆகிவிடுவீர்கள். பின்னால் உள்ளவர்களும் இருக்க வேண்டும் அல்லவா? முதலில் பின்னால் உள்ளவர்கள். பாருங்கள், பாப்தாதா பின்னால் உள்ளவர்களுக்கு அதிகமாக வாழ்த்து கொடுக் கின்றார்கள், அதையும் விட அதிகமாக கீழே இருப்பவர்களுக்குக் கொடுக்கின்றார்கள், இது கூட தியாகத்திற்கான பிரத்யட்சபலன் ஆகும்

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையினுடைய விசேஷத்தன்மையைப் பார்க்கின்றார்கள். சம்பூரணம் ஆகவில்லை, முயற்சியாளர்களாக இருக்கின்றார்கள், ஆனால், அவர்களுக்குள் எந்த விசேஷத் தன்மையும் இல்லாத குழந்தை என்று ஒரு குழந்தை கூட தந்தைக்குக் கிடையாது. அனைவருக் குள்ளும் விசேஷத்தன்மை இருக்கின்றது. அனைத்தையும் விட முதல் விசேஷத்தன்மை என்னவென்றால் கோடியில் ஒருவர் என்ற பட்டியலில் உள்ளீர்கள் அல்லவா. மேலும், விசேஷத் தன்மை என்னவென்றால் பெரிய, பெரிய தபஸ்வி மகான் ஆத்மாக்களாக, 16108 ஜெகத்குருக்களாக, சாஸ்திரவாதிகளாக, மஹாமண்டலேஸ்வரர்களாக இருக்கலாம், ஆனால் தந்தையை அறிந்திருக்க வில்லை மற்றும் தந்தையின் அனைத்து குழந்தைகளும் தந்தையை அறிந்து கொண்டுவிட்டீர்கள் அல்லவா. எனவே, தந்தையை அறிந்துகொள்வது என்பது எவ்வளவு பெரிய விசேஷத்தன்மை! உள்ளத்தில் இருந்து என்னுடைய பாபா என்று கூறுகின்றீர்கள் அல்லவா. என்னுடையவர் என்று சொல்லி அதிகாரியாக ஆகிவிட்டீர்கள் அல்லவா. எனவே, இதை என்னவென்று சொல்லலாம்? யார் தந்தையைக் கண்டுகொண்டார்களோ, அறிந்து கொண்டார்களோ, அவர்கள் அறிந்துகொண்டது என்பது புத்தியின் விசேஷத்தன்மை ஆகும், கண்டறியும் சக்தி உள்ளது. எனவே, இப்பொழுது அனைவருடைய கண்டறியும் சக்தி உயர்ந்ததாக உள்ளது. நல்லது, இன்று விசேஷமாக கொண்டாடுவதற்காக வந்திருக்கின்றீர்கள் அல்லவா? இன்று கொண்டாடுவதற்கான தினமா அல்லது இன்றும் கேட்பதற்கான தினமா? கேட்கவும் வேண்டுமா? நல்லது.

சிவராத்திரி என்று சொல்கின்றார்கள், ஆனால், உங்களுக்கு இப்பொழுது இது என்னவாக உள்ளது? உங்களுக்கு இராத்திரி இல்லையென்றால் பிறகு என்ன? அமிர்தவேளையா? நீங்கள் இராத்திரி யிலிருந்து வெளிவந்துவிட்டீர்களா அல்லது கொஞ்சம் கொஞ்சம் இராத்திரி இப்பொழுதும் உள்ளதா? விடைபெற்றுவிட்டதா? ஏதாவது ஒருவிதமான இருள் வருகின்றதா அல்லது அழிந்து விட்டதா? அமிர்தவேளை சதா வரதானத்திற்கான சமயம் ஆகும், எனில், உங்களுக்கு தினமும் வரதானம் கிடைக்கின்றது அல்லவா? எனவே, தந்தை வருவதோ இராத்திரியில், ஆனால், எங்களுக்கு அமிர்தவேளை பொன்னான காலையாக, வைரமான காலையாக ஆகிவிட்டது என்று நீங்கள் சொல்வீர்கள். எனவே, அப்படி தன்னுடைய வரதானி சொரூபத்தைப் பார்க்கின்றீர்களா? மாயா வரதானத்தை மறக்கவைப்பதில்லையே? மாயா

வருகிறதா? அவ்வப்போது வருகின்றதா? மாயா கடைசி நேரம் வரை வரும். ஒன்றும் செய்யாமல் அப்படியே சென்றுவிடாது. ஆனால், மாயாவின் வேலை வருவது மற்றும் உங்களுடைய வேலை தூரத்திலிருந்தே விரட்டுவது. வந்து விட்டது பிறகு விரட்டுகிறீர்கள், இவ்வாறு கூடாது. அந்த சமயம் இப்பொழுது முடிவடைந்து விட்டது. மாயா வந்தது, மேலும் உங்களை அசைத்தது, பிறகு, நீங்கள் விரட்டினீர்கள், சமயம் கழிந்துவிட்டது அல்லவா! ஆனால், அமைதியின் சாதனங்களால் நீங்கள் தூரத்தில் இருந்தே இது மாயா என்பதை அறிந்து கொள்ள முடியும். இதில் கூட நேரத்தை வீணாக்காதீர்கள். மேலும், வரவிடுகின்றார்கள் அல்லவா என்று மாயாவும் பார்க்கின்றது அல்லவா, ஆகையினால், வருவதற் கான பழக்கம் ஆகிவிடுகிறது. எவ்வாறு ஏதாவதொரு விலங்கை தன்னுடைய வீட்டிற்கு வர வழைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி விடுகிறீர்கள், பிறகு தொல்லை அடைந்து அதை விரட்டவும் செய்கின்றீர்கள், ஆனால், அதற்கு பழக்கம் ஆகிவிடுகிறது அல்லவா! மேலும், சில குழந்தைகள் மாயாவிற்கு தேநீர், தண்ணீர் கொடுக்கின்றார்கள் என்று தந்தை சொல்லியிருந்தார். தேநீர், தண்ணீர் என்று எதைக் கொடுக்கின்றீர்கள்? தெரியும் அல்லவா? என்ன செய்வேன், எப்படி செய்வேன், இப்பொழுதோ முயற்சியாளர் தானே,, இப்பொழுது சம்பூரணம் ஆகவில்லை, இறுதியில் ஆகிவிடுவேன் - இந்த சங்கல்பமே தேநீர், தண்ணீர் ஆகும். எனவே தேநீர், தண்ணீர் கிடைக்கின்றது என்று அதுவும் (மாயா) பார்க்கின்றது. யாருக்காவது ஒருவேளை தேநீர், தண்ணீர் கொடுத்தீர்கள் என்றால் அவர்கள் கிளம்பிச் செல்வார்களா அல்லது அமர்ந்துவிடுவார்களா? எப்பொழுதாவது, ஏதாவது பிரச்சனை வருகிறது என்றால், ஏன், என்ன, எப்படி, சில நேரங்களில் நடக்கத்தான் செய்கிறது, இப்பொழுது யார் பாஸ் (தேர்ச்சி) ஆகியிருக்கின்றார்கள், அனைவரிடமும் உள்ளது - இதுவே மாயாவை உபசரிப்பதாகும். கொஞ்சம் காரம், கொஞ்சம் இனிப்பும் சாப்பிடக் கொடுக் கின்றீர்கள். மற்றும் பிறகு, என்ன செய்கின்றீர்கள்? தொல்லையடைந்த பிறகு இப்பொழுது பாபா நீங்கள் தான் விரட்ட வேண்டும் என்று சொல்கின்றீர்கள். வரவிடுவதோ நீங்கள், விரட்ட வேண்டியதோ பாபா, ஏன்? ஏன் வரவிடுகின்றீர்கள்? மாயா அடிக்கடி ஏன் வருகின்றது? ஒவ்வொரு சமயமும், ஒவ்வொரு கர்மம் செய்யும்பொழுதும், திரிகாலதரிசி என்ற ஆசனத்தில் அமருவ தில்லை. திரிகாலதரிசி என்றால் கடந்தகாலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தை அறிந்திருப் பவர்கள். எனில், ஏன், என்ன என்று சொல்ல வேண்டியிருக்காது. திரிகாலதரிசி ஆகியிருக்கும் காரணத்தினால் முன்னதாகவே இந்த விசயங்கள் வரத்தான் செய்யும், நடக்கத்தான் செய்யும், தன் மூலமாகவோ, பிறர் மூலமாகவோ, மாயா மூலமாகவோ, இயற்கையின் மூலமாகவோ, அனைத்து விதமான பிரச்சனைகளும் வரும், வரத்தான் செய்யும் என்பதை அறிந்திருப்பீர்கள். ஆனால், சுயஸ்திதி சக்திசாலியாக இருக்கிறதென்றால் பிரச்சனை அதற்கு முன்னால் ஒன்றுமே இல்லை. பிரச்சனை பெரியதா அல்லது சுயஸ்திதி பெரியதா? அல்லது சில நேரம் சுயஸ்திதி பெரியதாகி விடுகிறது, சில நேரம் பிரச்சனை பெரியதாகிவிடுகிறது, இப்படி உள்ளதா? எனவே, இதற்கான சாதனம் என்னவென்றால் ஒன்று முதல், இடை, இறுதி ஆகிய மூன்று காலங்களையும் சோதித்து, புரிந்துகொண்டு பிறகு என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். நிகழ்காலத்தை மட்டும் பார்க்காதீர் கள். நிகழ்காலத்தை மட்டும் பார்க்கின்றீர்கள், ஆகையினாலேயே, சில நேரம் பிரச்சனை உயர்வாக உள்ளது மற்றும் சில நேரம் சுயஸ்திதி உயர்வாக உள்ளது. உலகத்திலும் கூட, முதலில்

சிந்தித் திடுங்கள் பிறகு செய்திடுங்கள் என்று சொல்கின்றார்கள். இல்லையென்றால் யார் யோசித்து செய்யவில்லை, செய்த பின் யோசிக்கின்றார்கள் என்றால் அது பச்சாதாபமாக (துக்கம்) ஆகிவிடு கிறது. இப்படி செய்திருக்கக் கூடாது, இப்படி செய்திருக்க வேண்டும் என்று செய்தபின் யோசிப்பது என்றால் அது பச்சாதாபம் ஆகும். மேலும், முதலில் யோசிப்பது என்பது ஞான சொரூப ஆத்மாவின் குணம். துவாபர, கலியுகத்திலோ அனேகவிதமான பச்சாதாபத்தை அடைந்து வந்திருக்கின்றீர்கள் அல்லவா? ஆனால், இப்பொழுது சங்கமயுகத்தில் பச்சாதாபம் அடைவது என்றால் ஞான சொரூப ஆத்மா ஆகவில்லை என்று அர்த்தம். தனக்குத் தானே, மனதில் ஒரு வினாடி கூட பச்சாதாபம் வரவே வராத அளவு தன்னை உருவாக்குங்கள்.

இந்த வைரவிழாவில் விசேஷமாக முழு நாளில் ஒன்று சமயம் மற்றும் இரண்டாவது சங்கல்பம் - இந்த இரண்டு பொக்கிஷங்கள் மீது கவனம் வைக்க வேண்டும். பொக்கிஷங்களோ நிறைய உள்ளன, ஆனால், விசேஷமாக இந்த இரண்டு பொக்கிஷங்கள் மீது கவனம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் சிரேஷ்டமான, சுபமான சங்கல்பங்களை எவ்வளவு சேமித்திருக்கின்றேன்? என்ற கவனம் கொடுக்க வேண்டும். ஏனெனில், முழு கல்பத்திற்கும் சேமிப்பு செய்வதற்கான வங்கி இப்பொழுதே திறந்திருக்கிறது. சத்யுகத்தில் சேமிப்பு செய்வதற்கான இந்த வங்கி மூடப்பட்டுவிடும். இந்த வங்கியும் இருக்காது, வேறு வங்கியும் இருக்காது. அவ்வளவு செல்வம் உங்களிடம் இருக்கும், நீங்கள் யாரிடமும் எதையும் பெறுவதற்கான அவசியமே இருக்காது. வங்கியில் ஏன் வைக்கின்றனர்? ஒன்று பாதுகாப்பதற்காக மற்றும் இரண்டாவது வட்டி கிடைப்பதனால் வைக் கின்றனர். சிலர் மிகவும் புத்திசாலியாக இருக்கின்றனர், அவர்கள் வட்டிப் பணத்திலேயே வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். மேலும், இந்த சமயத்தில் ஒருவேளை அப்படி புத்திசாலியாக இருக்கின்றார்கள் என்றால் நல்லது, சேமிப்பு செய்கின்றார்கள் அல்லவா. ஆனால், வட்டியை எந்த பக்கம் ஈடுபடுத்துகின்றார்கள், அதைப் பார்க்க வேண்டும். சத்யுகத்தில் இந்த வங்கியும் இருக்காது, ஆன்மிகப் பொக்கிஷத்தை சேமிப்பு செய்வதற்கான வங்கியும் இருக்காது. இரண்டு வங்கிகளும் இருக்காது. இந்த சமயம் ஒன்றை பல கோடி மடங்காக மாற்றித் தரக்கூடிய வங்கி உள்ளது. ஆனால், ஒன்றை சேமித்தால் கோடி கிடைக்கும், அவ்வாறு அல்ல. கணக்கு உள்ளது. வைர விழாவில் உண்மையான வைரம் ஆகியே தீரவேண்டும், இது உறுதியாக உள்ளது அல்லவா? அல்லது ஆகமுடியுமா, முடியாதா தெரியவில்லை என்று சில நேரத்தில் எண்ணம் வருகிறதா? தெரியவில்லை என்பது வருவதில்லையே? என்ன ஆனாலும் சரி, தியாகம் செய்ய வேண்டி இருந்தாலும், தபஸ்யா செய்ய வேண்டி இருந்தாலும், பணிவானவர் ஆகவேண்டி இருந்தாலும், என்ன ஆனாலும் சரி, கண்டிப்பாக ஆகவேண்டும். ஆகவேண்டுமா? சொல்லுங்கள், ஆம் அல்லது இல்லை என்று ஏதாவது சொல்லுங்கள். (ஆம்) பார்க்கலாம், ஆம் என்று சொல்வது மிகவும் சுலபம். சொன்னது போல் ஆகவேண்டும், இதில் கவனம் கொடுக்க வேண்டும். முதன்முதலில் இந்த நான் என்ற வார்த்தையை தியாகம் செய்ய வேண்டும். இந்த நான் என்ற வார்த்தை மிகவும் பழைய வார்த்தை, ஆனால், தற்சமயம் இது மிகவும் இராயல் ரூபமாக ஆகிவிட்டது. இந்த நான் என்ற வார்த்தை முடிவடைய வேண்டும், பேச்சிலும் கூட பாபா பாபா என்ற வார்த்தை வரவேண்டும். சொல்லும் போது பாருங்கள் சாதாரண விசயம், நான் தகுதியானவர் அல்லவா, தகுதியான வராதலால் எனக்கு வசதி, வாய்ப்பு

அல்லது சேவை அதன் அனுசாரம் கிடைக்க வேண்டும். நான் தகுதியானவர், நான் செய்கின்றேன், இது சரியா? செய்கின்றீர்கள் தானே, பிறகு, செய்கின்றேன் என்று ஏன் சொல்லக்கூடாது! நான் தவறு, நான் சரி, சொல்லும் போது நான் செய்கின்றேன் என்று தான் சொல்ல வேண்டும் அல்லவா! . . . நீங்கள் செய்யவில்லையா? செய்வது பாபா. அந்தத் தந்தை செய்பவர் செய்விப்பவர் ஆவார், ஆனால், செய்பவர்களோ நீங்கள் தானே. நான் என்று சொல்வது தவறானதாக ஏன் ஆனது? எப்பொழுது நான் என்ற வார்த்தையை பயன்படுத்துகின்றீர்களோ, அப்பொழுது உண்மையில் நான் என்ற வார்த்தை எதைக் குறிக்கிறது? ஆத்மாவையா அல்லது சரீரத்தையா? நான் யார்? ஆத்மா அல்லவா, சரீரம் இல்லை தானே? ஒருவேளை, ஆத்ம அபிமானி ஆகி நான் ஆத்மா என்ற இந்த நினைவில் இருந்து நான் என்ற வார்த்தையைப் பயன்படுத்து கிறீர்கள் என்றால் அது சரியானதாகும். ஆனால், நான் என்ற வார்த்தையை தேக உணர்வின் ரூபத்தில் பயன்படுத்தினீர்கள் என்றால் அது தவறானதாகும். முழு நாளில் இந்த நான் என்ற வார்த்தை அதிகமாக வருகிறது மற்றும் வரத்தான் செய்யும். எனவே, பயிற்சி செய்யுங்கள் - எப்பொழுதெல்லாம் நான் என்ற வார்த்தை சொல்கின்றீர்களோ, அப்பொழுது நான் யார்? உண்மையில் நான் ஆத்மா ஆவேன். சரீரத்தை என்னுடையது என்று சொல்கின்றீர்கள். எனவே, நான் என்ற வார்த்தையை ஒருவேளை ஆத்ம அபிமானி ஆகி சொன்னீர்கள் என்றால் ஆத்மாவிற்கு தந்தையின் நினைவு தானாக வரும். சொல்ல வேண்டிய அவசியமே ஏற்படாது. நான் ஆத்மா - இந்தப் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். எப்பொழுது நான் என்ற வார்த்தையை சொல்கின்றீர்களோ, அப்பொழுது தன்னுடைய பெயர், ரூபம் நினைவில் வந்துவிடுகிறது - இந்தத் தவறான பயிற்சி ஏற்பட்டுவிட்டது மற்றும் இயல்பாக ஆகிவிட்டது. நான் யார்? நான் இன்னார். இது இயல்பாக ஆகிவிட்டது அல்லவா? யோசிக்க வேண்டியதில்லை. இந்தத் தவறான உணர்வுடன் நான் என்ற வார்த்தை என்ன பயன்படுத்துகின்றீர்களோ, அப்பொழுதே ரிசல்ட்டில் உழைப்பு அதிகமாகவும், பிராப்தி குறைவாகவும் உள்ளது. சில குழந்தைகள் நான் மிகுந்த சேவை செய்கின்றேன், மிகவும் உழைக்கின்றேன், ஆனால், பலன் அவ்வளவாக இல்லை என்று கூறுகின்றார்கள். இதற்கான காரணம் என்ன? வரதானம் அனைவருக்கும் ஒன்று தான், 60 ஆண்டுகளாக இருப்பவர்களுக்கும் ஒன்று தான், ஒரு மாதமாக வருபவர்களுக்கும் ஒன்று தான். பொக்கிஷங்கள் அனைவருக்கும் ஒன்றுபோல் உள்ளன. பாலனை அனைவருக்கும் ஒன்றுபோல் கிடைக்கின்றது, தினச்சரியம், விதி முறைகள் அனைவருக்கும் ஒன்றுபோல் உள்ளது. வெவ்வேறாக இல்லை அல்லவா. வெளி நாட்டுக்கு விதிமுறைகள் வேறு, இந்தியாவிற்கு வேறு, இப்படி இல்லை தானே. கொஞ்சம் கொஞ்சம் வித்தியாசம் உள்ளதா? இல்லையா? எனவே, அனைவரும் ஒன்று தான், பிறகு, சிலருக்கு வெற்றி கிடைக்கிறது, சிலருக்குக் குறைவாகக் கிடைக்கிறது - ஏன்? காரணம் என்ன? தந்தை குறைவாக உதவி செய்கின்றாரா என்ன? சிலருக்கு அதிகம் கொடுக்கின்றார், சிலருக்குக் குறை வாகக் கொடுக்கின்றார், அப்படியா? இல்லை. பிறகு, ஏன் வித்தியாசம் ஏற்படுகிறது? காரணம் என்ன? தன்னுடைய தவறே ஆகும். அல்லது தேக உணர்வினுடைய நான் என்பது வந்துவிடுகிறது அல்லது அவ்வப்பொழுது யார் துணையாக இருக்கின்றார்களோ, அவர்களுடைய வெற்றியைப் பார்த்து பொறாமையும் வந்துவிடுகிறது. இந்தப் பொறாமையின் காரணத்தால் உள்ளப்பூர்வமாக என்ன சேவை செய்ய வேண்டுமோ, அதை புத்தியால் செய் கின்றனர், ஆனால், உள்ளப்பூர்வமாக செய்வதில்லை. ஆனால், பலனோ

உள்ளப்பூர்வமாக சேவை செய்யும் பொழுதே கிடைக்கின்றது. சில நேரம் குழந்தைகள் புத்தியை பயன்படுத்துகின்றனர், ஆனால், உள்ளம் மற்றும் புத்தி இரண்டை யும் இணைத்து செய்வதில்லை. புத்தி கிடைத்துள்ளது, அதை காரியத்தில் ஈடுபடுத்துவது நல்லது ஆனால், புத்தியை மட்டும் ஈடுபடுத்துவது போதாது. சிலர் உள்ளப்பூர்வமாக செய்கின்றார்கள், உள்ளப்பூர்வமாக செய்பவர்களின் உள்ளத்தில் தந்தையின் நினைவும் சதா உள்ளது. யார் புத்தியை மட்டும் பயன்படுத்தி செய்கின்றார்களோ, அவர்களுக்கு, ஆம், பாபா தான் செய்விக்கக்கூடியவர், ஆம், பாபா தான் செய்விக்கக்கூடியவர் என்று கொஞ்ச நேரத்திற்கு புத்தியில் நினைவு இருக்கும், ஆனால், கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, அதே நான் என்பது வந்துவிடும். ஆகையினால், புத்தி மற்றும் உள்ளம் ஆகிய இரண்டையும் சமநிலையில் வைத்திடுங்கள்.

வைரவிழா ஆண்டில் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டது. விசேஷமாக சேமிப்பு கணக்கை அதிகரித்திடுங்கள். முழு நாளும் என்னால் அப்படி எந்தவொரு தவறும் ஏற்படவில்லை, யாருக்கும் துக்கம் கொடுக்கவில்லை, யாரிடமும் எந்த சச்சரவும் இல்லை, அதாவது எதையும் இழக்கவில்லை என்று மட்டும் யோசித்தால் போதாது. இழக்கவில்லை என்பது நல்ல விசயம், ஆனால் சேமிப்பு செய்தீர்களா? சேவையும் செய்தீர்கள் ஆனால், தன்னுடைய ஆன்மிகத் தன்மை யால் சேவையில் வெற்றி அடைந்தீர்களா? அல்லது வெற்றியை சேமிப்பு செய்தீர்களா? சேவையில் நேரத்தை ஈடுபடுத்தினீர்கள், இந்த நல்ல விசயம் செய்தீர்கள் அல்லவா, ஆனால், சேவையை எந்த விதிப்படி செய்தீர்கள்? நானோ முழு நாளும் இத்தனை சேவையில் பிஸியாக இருக்கின்றேன், என்னுடையதே எனக்குத் தெரிவதில்லை என்று சிலர் கூறுகின்றனர். பிஸியாக இருக்கின்றீர்கள் இது மிகவும் நல்லது, ஆனால், சேவையின் பிரத்யட்சபலன் சேமிப்பு ஆனதா? அல்லது உழைப்பு மட்டும் செய்தீர்களா? சேவையில் 8 மணி நேரத்தை ஈடுபடுத்தினீர்களா அல்லது 8 மணி நேரம் தான் சேவையினுடைய சேமிப்பு ஏற்பட்டதா? சமயம் சேமிப்பு ஆனதா? அல்லது பாதி சேமிப்பு ஆனது, பாதி ஓட்டத்திலும், பாதி யோசனையிலும் கழிந்ததா? சிரேஷ்ட சங்கல்பம், சுபபாவனை, சுபமான விருப்பம் நிறைந்த சங்கல்பம் சேமிப்பு ஆகின்றது. எனவே, முழு நாளில் சேமிப்புக் கணக்கை குறித்திடுங்கள். எப்பொழுது சேமிப்புக் கணக்கு அதிகரித்துக் கொண்டே செல்லுமோ, அப்பொழுது தானாகவே வைரம் ஆகிவிடலாம். இப்பொழுது கூட சமயம் மற்றும் சங்கல்பம் – நல்லதாகவும் இல்லை, மோசமானதாகவும் இல்லை. மோசமானதாக இல்லை, இதிலிருந்து விடுபட்டுவிட்டீர்கள், ஆனால், நல்லதாக சேமிப்பானதா? புரிந்ததா? சமயத்தை, சங்கல்பத்தை சேமித்திடுங்கள், எந்தளவு இப்பொழுது சிக்கனப்படுத்துவீர்களோ, சேமிப்பு செய்வீர்களோ, முழு கல்பம் அதன் அனுசாரம் இராஜ்யமும் செய்வீர்கள் மற்றும் பூஜைக்குரியவராகவும் ஆகுவீர்கள். துவாபரயுகத்தில் இருந்து நீங்கள் சாகார ரூபத்தில் இறங்கும் கலையில் வருகின்றீர்கள். ஆனால், உங்களால் சேமிப்பு செய்யப்பட்ட கணக்கு, உங்களுடைய ஜடச்சித்திரங்களுக்குப் பூஜை செய்விக் கிறது. எனவே, அனைவரும் இதைக் குறித்திட வேண்டும், அப்பொழுதே வீணாக அல்லது சாதாரண மாக சமயம் எவ்வளவு கழிந்தது? சாதாரண சங்கல்பம் எத்தனை வந்தது? என்பது தெரியவரும். ஆனால், ஒரு விசயத்தில் கவனம் இருக்க வேண்டும் - ஒருவேளை, உங்களுடைய இன்றைய தினம் சேமிப்புக் கணக்கு மிகவும் குறைவாக இருந்தது என்றால் குறைவான

சேமிப்பைப் பார்த்து உள்ளம் உடைந்து போகக் கூடாது மேலும், இப்பொழுதும் நமக்கு சேமிப்பு செய்வதற்கான வாய்ப்பு உள்ளது என்று புரிந்துகொள்ளுங்கள். தன்னை ஊக்கம், உற்சாகத்தில் கொண்டு வாருங்கள். தனக்குத் தானே போட்டி போடுங்கள், பிறரோடு அல்ல. இன்று ஒருவேளை, 8 மணி நேரம் சேமிப்பு செய்திருந்தால், நாளை 10 மணி நேரம் சேமிப்பு செய்ய வேண்டும் என்று தனக்குத் தானே போட்டி போடுங்கள். உள்ளம் உடைந்து போக வேண்டாம், ஏனெனில், இப்பொழுதும் கூட சேமிப்பு செய்வதற்கான சமயம் உள்ளது. இப்பொழுது டூ லேட் (மிகவும் தாமதமாகிவிட்டது) என்ற போர்டு வைக்கப்படவில்லை. இறுதி முடிவுக்கான (ரிசல்ட்) சமயம் இப்பொழுது அறிவிக்கப்படவில்லை. எவ்வாறு லௌகீகத்தில் தேர்வுக்கான தேதி முடிவாகிவிட்டது என்றால் நல்ல முயற்சியாளர்கள் என்ன செய்வார்கள்? உள்ளம் உடைந்து போவார்களா அல்லது முயற்சியில் முன்னேறுவார்களா? எனவே, நீங்களும் உள்ளம் உடைந்து போகக்கூடாது. மேலும், ஊக்கம், உற்சாகத்தில் வந்து, நான் என்னுடைய சேமிப்புக் கணக்கை அதிகரித்தே ஆகவேண்டும் என்ற திடசங்கல்பம் செய்யுங்கள். புரிந்ததா? நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள பிறந்தநாள் வாழ்த்துக்கள் கொடுக்கக்கூடிய குழந்தைகளுக்கு, சதா தந்தையுடன் கூடவே இருக்கக்கூடிய இணைந்த ரூபத்தில் இருக்கும் குழந்தைகளுக்கு, சதா ஊக்கம், உற்சாகத்தின் மூலம் தன்னை மற்றும் பிறரை முன்னேற்றக் கூடிய குழந்தைகளுக்கு, நாலாபுறங்களிலும் உள்ள சேவையில் முன்னேறக் கூடிய உண்மையான சேவாதாரி குழந்தை களுக்கு பாப்தாதாவின் கோடி கோடி கோடி மடங்கு வாழ்த்துக்கள். அன்பு நினைவுகளின் கூடவே தந்தையும் குழந்தைகளுடைய வாழ்த்துக்களை, அன்பு நினைவுகளை சுவீகாரம் செய்து கொண்டி ருக்கின்றார். அனைத்து பக்கங்களில் இருந்தும் வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள் என்ற உள்ளத்தின் பாடல் ஒலித்துக் கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருக்கின்றார். அத்தகைய வாழ்த்துக்களைப் பெறக்கூடிய வர்கள் மற்றும் வாழ்த்துக்களைக் கொடுக்கக்கூடியவர்கள் ஆகிய இருவரின் சங்கமத்திற்கான விசேஷ அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

வரதானம் : ஒவ்வொரு விசயத்திலும் நன்மை உள்ளது எனப் புரிந்துகொண்டு ஆடாத, அசையாத மகாவீரர் ஆகக்கூடிய திரிகாலதரிசி ஆகுக.

எந்தவொரு விசயத்தையும் ஒரு காலத்தின் பார்வையோடு பார்க்காதீர்கள், திரிகாலதரிசி ஆகிப் பாருங்கள். ஏன், என்ன என்பதற்கு பதிலாக சதா என்ன நடந்து கொண்டிருக்கின்றதோ, அதில் நன்மை உள்ளது என்ற இந்த சங்கல்பமே இருக்க வேண்டும். பாபா என்ன சொல்கின்றாரோ, அதை செய்து கொண்டே செல்லுங்கள், பிறகு பாபாவாயிற்று, பாபாவின் வேலை ஆயிற்று. பாபா எவ்வாறு நடத்துகின்றாரோ, அவ்வாறு நடந்தீர்கள் என்றால் அதில் நன்மை நிறைந்திருக்கின்றது. இந்த நம்பிக்கையினால் ஒருபொழுதும் தடுமாற்றம் ஏற்படாது. சங்கல்பம் மற்றும் கனவில் கூட வீண் எண்ணம் வரக்கூடாது, அப்பொழுதே ஆடாத, அசையாத மகாவீரர் என்று கூறமுடியும்.

சுலோகன்: யார் ஸ்ரீமத்தினுடைய சமிக்ஞையின் அனுசாரம் ஒரு நொடியில் பற்றற்றவராகவும் மற்றும் அன்பானவராகவும் ஆகின்றார்களோ, அவர்களே தபஸ்வி ஆவார்கள்.